# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1480 - 2007 ජනවාරි 12 වැනි සිකුරාදා - 2007.01.12

*1480 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 25 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | – |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, சனவரி 19 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, சனவரி 05 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாது காப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

*கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் பதவி*

கதிர்காமத்தில் அமைந்துள்ள இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்த விண்ணப்பங்கள் 2007, பெப்புருவரி 12 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1, காலி வீதி, கொழும்பு 4" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**.- (அ) விண்ணப்பப்பத்திரம் அல்லது அது சம்பந்தமான கடிதங்கள் இந்துசமய கலாசார அலுவல்கள் பணிப்பாளருக்கன்றி வேறு எந்த உத்தியோகத்தரதும் பிரத்தியேகப் பெயருக்கும் அனுப்பப்படுதல் கூடாது.

(ஆ) விண்ணப்பப்பத்திரம் அல்லது அது சம்பந்தப்பட்ட ஏதாயினும் கடிதங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் குறித்துச் செய்யப்படும் முறையீடுகள் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படமாட்டா.

2. **சம்பளம்**.- இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த சம்பள விகிதம் ரூபா 13,520 - 5 x 120 - 11 x 140 - 10 x 210 - 10 x 290 - 20,660 உம் ஏனைய வாழ்க்கைச் செலவு படிகளும்.

3. **வயதெல்லை**.- 2007 பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதியன்று 26 வயதுக்குக் குறையாதவராகவும் 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இருக்கக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.

4. **கல்வித்தகைமைகள்**.- (i) பின்வரும் பாடங்களுள் ஒன்றைக் கொண்டதாக க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 3 பாடங்களுடனான சித்தி அல்லது அதற்கு சமனான கல்வித் தகைமை -

(1) கணக்கியல்
(2) வர்த்தகமும் நிதியும்
(3) பொருளியல்

(ii) கட்டாயமாக இந்து மதத்தைச் சார்ந்தவராக இருப்பதுடன் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இந்துசமய பாடத்தில் சித்தி அல்லது க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் இந்துநாகரீகம் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

5. **பிற தகைமைகள்**.- (i) புத்தி சுவாதீனமுள்ளவராகவும் தேகாரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

6. **சேவைக்கு அமர்த்தும் விதிகள்**.- (i) இப்பதவிகள் நிரந்தர மானதும், பங்களிப்பு ஒய்வூதிய உரித்துடையதுமாகும். 3 வருடங்கள் தகுதிகாண் காலத்தைக் கொண்டுள்ளது.

(ii) நியமனம் பெறுவோர் திணைக்களத்தின் கட்டளைகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் ஸ்தாபன விதிக் கோவை நிபந்தனைகளுக்கும், அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வேறு கட்டளைகளுக்கும் நியதிகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

7. 15/90 ஆம் இலக்க 1990.03.09 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் விதிகளுக்கமைய நடாத்தப்படும் எழுத்துப் போட்டிப் பரீட்சை மூலம் நியமனங்கள் வழங்கப்படும். எழுத்துப் பரீட்சையானது திறமை, ஆர்வம், பொது விவேகம் ஆகியவற்றைப் பரீட்சிக்கும் முறையிலான உளச்சார்பு பரீட்சை ஆகும்.

8. எழுத்துப் பரீட்சையில் தேர்வு பெறும் பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படக்கூடியதாக தமது கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், இரண்டு குணச்சான்றிதழ்கள் என்பவற்றைத் தயாராக வைத்திருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.

9. திணைக்களத் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பிந்திக் கிடைக்கப்பெறின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தமது விண்ணப்பப் படிவம் முடிவுத் திகதிக்கு முன்பு அனுப்பக் கூடியதாக அவற்றை நேர காலத்திற்குத் தாமதமின்றி சமர்ப்பிப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

10. இவ்வர்த்தமானியில் பகுதி I : தொகுதி (IIஅ) வின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நிபந்தனைகளுக்குப் பொருந்தக்கூடிய பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

248 1/1, காலி வீதி,
கொழும்பு 04.
2006.12.26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

*கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் பதவி*

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :----.
   (அ) முதற்பெயர் :----.
   (ஆ) வேறு பெயர்கள் :----.

2. விலாசம் :----.

3. பிறந்த திகதி :-
   ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

4. 2007.02.12 இல் வயது :-
   வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

5. (i) தேசிய இனம் :----.
   (ii) சமயம் :----.

6. நீர் வம்சாவழி இலங்கைப் பிரசையா அல்லது பதிவு செய்ததன் பேரில் இலங்கைப் பிரசையா? (பதிவு செய்திருப்பின் பதிவிலக்கமும் திகதியும்) :----.

7. பிறந்த இடம் :----.

8. ஆணா, பெண்ணா? :----.

9. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.

10. கல்வித் தகைமைகள் :----.

11. தற்போது அரசாங்க சேவையில் உள்ளீரா? அப்படியாயின் :-
 (i) திணைக்களம் :----.
 (ii) பதவி :----.
 (iii) வேலைக்குச் சேர்ந்த திகதி :----.

12. இதற்கு முன்னர் அரசாங்கத்தில் சேவை புரிந்தவரா? அப்படியாயின் :-

 (i) திணைக்களம் :----.
 (ii) பதவி :----.
 (iii) சேவையிலிருந்து விலகிய திகதி :----.
 (iv) காரணம் :----.

13. உம்மைப்பற்றிய விபரம் தெரிந்து கொள்ளக்கூடிய உமக்கு அறிமுகமான இருவரினது பெயர்களும் விலாசமும் தருக.-

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | .................. | ................................. |
| 2. | .................. | ................................. |

14. யாதேனும் குற்றவியல் குற்றத்திற்காக நீதிமன்றமொன்றில் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா? அங்ஙனமாயின் வழக்கின் திகதி, இலக்கம் என்பவற்றுடன் அது பற்றிய முழு விபரங்களையும் தருக :----.

15. வேறு தகைமைகள் :----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். இதிலுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் கண்டு பிடிக்கப்பட்டால் தெரிவு செய்வதற்கு முன்னராயின் தகைமையற்றவராக்கப்படுவதற்கும் நியமனத்தின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி நீக்கப்படுவதற்கும் உரியவராவேன் என்பதையும் அறிவேன்.

திகதி.----.

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**விண்ணப்பதாரி அரசாங்க சேவையிலுள்ளவராயின் குறிப்பிட்ட திணைக்களத் தலைவரின் சிபாரிசு**

விண்ணப்பதாரி இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

...........................................
அமைச்சு/திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

1-170

---

## இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பிற்கு ஏற்ப இலங்கை நிர்வாக சேவை I ஆம் வகுப்பு அலுவலர்களை விசேட தரத்திற்கு தரம் உயர்த்தல்

இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த அலுவலர்களை விசேட தரத்திற்கு உயர்த்துவதற்காக விண்ணப்பங்கள் கோரி 2006.11.24 ஆந் திகதிய 1473 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல், மீண்டும் அது பற்றிய அறிவித்தல் விடுக்கும் வரை இடைநிறுத்தப்படுகிறது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின்படி,

பீ. ஜீ. கருணாரத்ன,
பதில் கடமையாற்றும் செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2006, திசெம்பர் 27.

1-171

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.